# Ashram Song

## நிர்மாணத் திட்டம்



''கதரபி விருத்தியும் கைத்தொழில் வளர்ச்சியும்
மதவொற்றுமையும், மாதர் முன்னேற்றமும்
மதியினை மயக்கும் மதுவினை விலக்கலும்,
புதுமுறைக் கல்வியும். பொதுஜனக் கல்வியும்
நம்தாய் மொழியும், இந்திய மொழியும்,
ஊர்ச்சுகாதாரமும், உடற்சுகாதாரமும்
ஹரிஜன சேவையும், சரிசம உடைமையும்
வையம் வாழும் வகைசெய்யும் உழவர்
குஷ்டம் என்னும் கொடுநோய் கொண்டோர்,
மலைவாழ் குடிகள், மாணவர் தம்மொடு
தொழில்செய் மக்கள் துயரம் தீர்த்தலும்
ஆயஇப் பதினெண் அரும்பணி வாயிலாய்ச்
சர்வோ தயநற் சமுதாயத்தினை
நிர்மாணம் செய நித்தமும் உழைப்போம்''.

- கோ.வேங்கடாசலபதி